DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சுகுணாபாரதி | Caste: | |
| Husband's Name: | அருண்பாண்டியன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.10.2024.

(1 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை .பி.என்.எஸ்.எஸ் பிரிவு 355-ன் கீழ் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருக்கிறேன். என் அப்பா பெயர் முருகேசன். நான் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர். சாட்சி மதுரைவீரன் என்னுடைய பெரியப்பா. சாட்சி முனியசாமி என்னுடைய அண்ணன். சாட்சி சாவித்திரி என்னுடைய அக்கா. சாட்சி மாரிமுத்து, செந்தூர் பாண்டி, பாலமுருகன் ஆகியோர் என் ஊர்க்காரர்கள் அவர்களை தெரியும். எதிரிகள் சரவணன், முத்துபாண்டி, வினோத்குமார், அஜித், பாலகிருஷ்ணன், லதா, மாரீஸ்வரி, ஆகியோரை தெரியும். நேரில் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். லதா, பாலகிருஷ்ணன், அஜித் ஆகியோர் மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள். மற்ற எதிரிகள் அகமுடையார் என்கிற சேர்வை வகுப்பை சேர்ந்தவர்கள். 17.09.2017 அன்று மாலை 4.00 மணியளவில் சாவித்திரியும், நானும் பார்த்திபனூர் கடைத்தெருவிற்கு போவதற்காக புதுத்தெரு வழியாக உச்சிகாளியம்மன் கோவில் வழியாக

போய் கொண்டிருந்தபோது புதுத்தெருவை சேர்ந்த சரவணன் அங்கிருந்தார். அவர் சாவித்திரியை பார்த்து வாடி கருவக்குள்ள போவோம் என்று சொன்னார். அதனால் நாங்கள் திரும்ப வீட்டிற்கு போய்விட்டோம். அங்கு வீட்டில் யாருமில்லை. பெரியப்பா மட்டும் இருந்தார். அவர் பெயர் மதுரைவீரன். அவரிடம் நடந்த விஷயத்தை சொன்னோம். அவரும், முனியசாமி அண்ணன், நானும், சாவித்திரியும் புதுத்தெருவிற்கு போனோம். புதுத்தெருவிற்கு போய் சரவணனிடம் என் பெரியப்பா ஏன்டா இப்படி கேலி பண்ண என்று கேட்டார். அப்போது அந்த இடத்தில் எதிரிகள் முத்துப்பாண்டி, அஜித், வினோத் இருந்தார்கள். என் பெரியப்பா கேட்டதும் பற தேவிடியா பயல்களா நாங்க அப்படிதான் கேலி பண்ணுவோம் என்று எதிரிகள் நான்கு பேரும் சொன்னார்கள். ஏன்டா இப்படி பண்றிங்க என்று என் பெரியப்பா கேட்டவுடன் எதிரி சரவணன் என் பெரியப்பாவின் இடது கன்னத்தில் கையால் அடித்தார். எதிரி முத்துபாண்டி என் முனியசாமி அண்ணனை இடது கன்னத்தில் கையால் அடித்தார். எதிரி அஜித் என் பெரியப்பாவை முதுகில் முள் கம்பால் அடித்தார். எதிரி வினோத் என் அண்ணன் முனியசாமியை வலது தோள்பட்டையில் முள் கம்பால் அடித்தார். இந்த சம்பவம் நடந்துகொண்டிருந்தபோது பாலகிருஷ்ணன், லதா, மகேஸ்வரி, மாரீஸ்வரி ஆகியோர் அந்த இடத்திற்கு வந்து பற பயல்களுக்கு எவ்வளவு திமிருடா அவங்கள அடிங்கடா என்று சொன்னார்கள். எதிரி பாலகிருஷ்ணன் என் அண்ணன் முனியசாமியை ஓட்டால் அடித்தார். அந்த ஓட்டை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுவது அந்த ஓடுதான். உடைந்த ஓட்டுதுண்டுகள் இரண்டு **சா.பொ.1 வரிசை/அ.சா.3**. லதா, மாரீஸ்வரி, மகேஸ்வரி ஆகியோர் என் பெரியப்பாவை விளக்குமாறை வைத்து அடித்தார்கள். அப்போது எங்கள் தெருக்காரர்கள் மாரிமுத்து,

செந்தூர்பாண்டி, பாலமுருகன் ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். என் அண்ணனுக்கும், என் பெரியப்பாவுக்கும் உள்காயம் ஆகிவிட்டது அப்போது அங்கு வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி என் அண்ணனையும், என் பெரியப்பாவையும் பரமக்குடி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். அதன் பிறகு என் பெரியப்பா பார்த்திபனூர் காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுததார் என்று கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார்.

**1 முதல் 4, 7,8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:- இல்லை

**5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:- இல்லை

Taken down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted to the witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.4

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | செந்தூர்பாண்டி | Caste: | |
| Father's Name: | செல்லபாண்டி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.10.2024.

(1 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை .பி.என்.எஸ்.எஸ் பிரிவு 355—ன் கீழ் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருக்கிறேன். நான் JCB டிரைவராக வேலை செய்துவருகிறேன். சாட்சிகள் மதுரை வீரன், முனியசாமி, சுகுணாபாரதி, சாவித்திரி, மாரிமுத்து, பாலமுருகன் ஆகியோரை தெரியும். இந்த வழக்கின் எதிரிகள் சரவணன், முத்துபாண்டி, வினோத்குமார், அஜித், பாலகிருஷ்ணன், லதா, மாரீஸ்வரி ஆகியோரை தெரியும். நேரில் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். எதிரிகள் மறவர் மற்றும் அகமுடையார் வகுப்பை சேர்ந்தவர்கள். 17.09.2017 அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு நான் என் வீட்டிலிருந்து என் சித்தப்பா வீட்டிற்கு வந்தபோது, சுகுணாபாரதியும், சாவித்திரியும் பார்த்திபனூருக்கு சென்ற கொண்டிருந்தபோது புதுத்தெருவில் உச்சகாளியம்மன் கோவில்அருகில் சரவணன் என்பவர் சாவித்திரியை கேலி கிண்டல் செய்ததாக சாவித்திரி சொன்னார். மதுரைவீரன், முனியசாமி, மாரிமுத்து, பாலமுருகன்,சாவித்திரி,

சுகுணாபாரதி ஆகியோரும், நானும் புதுத்தெருவுக்கு சென்று சரவணனிடம் ஏன் இது மாதிரி பேசினீர்கள் என்று கேட்டோம். அப்போது சரவணன், சரவணன் தம்பி முத்துபாண்டி, வினோத், அஜித் ஆகியோரும் அங்கு இருந்தார்கள். முனியசாமி அவர்களை கேட்டபோது பற தேவிடியா பயல்களா இந்த அளவுக்கு கேட்கிற அளவுக்கு வளந்துட்டிங்களா என்று சரவணன் கேட்டார். உங்களால் என்ன செய்யமுடியுமோ செய்யுங்க என்று சரவணன் சொன்னார். மதுரைவீரன் மறுபடியும் ஏன் இதுமாதிரி பண்றிங்க என்று கேட்டதற்கு சரவணன் மதுரை வீரனின் இடது கன்னத்தில் கையால்அடித்தார். முனியசாமியை சரவணன் தம்பி இடது கன்னத்தில் கையால் அடித்தார். பின்னர் அஜித்தும், வினோத்தும் முனியசாமியையும், மதுரைவீரனையும் முள்ளு கம்பால்அடித்தார்கள். சத்தம பரவலாக கேட்டபோது பாலகிருஷ்ணன் என்பவரும், அவருடைய மனைவி லதா, பரமேஸ்வரி, மாரீஸ்வரி ஆகியோர் அங்கு வந்து பற பயல்களுக்கு இவ்வளவு திமிரா கேட்கிற அளவுக்கு வளந்துட்டீங்களா இவுங்களா அடிங்கடா என்று சொன்னார்கள். சொல்லிவிட்டு பாலகிருஷ்ணன் கீழே கிடந்த சீமை ஓட்டை எடுத்து முனியசாமியின் வலது தோள்பட்டையில் ஓங்கி அடித்தார். அந்த ஓடுதான் தற்போது நீதிமன்றத்தில்இருக்கிறது. (நீதிமன்றத்தில் உள்ள **சா.பொ.1 வரிசை/அ.சா.4** ஓட்டுத்துண்டுகளை பார்த்து சாட்சி கைநீட்டி சாட்சியம் சொன்னார்.) பின்னர் லதா, மகேஸ்வரி, பரமேஸ்வரி மூன்று பேரும் முள்ளுகம்பால் மதுரைவீரனையும், முனியசாமியையும் ஓங்கி ஓங்கி அடித்தார்கள். அவர்களுக்கு உள்காயம் ஏற்பட்டது.அவர்களை நானும், பாலமுருகனும், மாரிமுத்துவும் விலக்கிவிட்டோம். அப்போது அங்கு வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி மதுரைவீரனையு.ம், முனியசாமியையும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக

மதுரைவீரனால் புகார் கொடுக்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார்.

**1 முதல் 4, 7,8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை

**5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை

Taken down to my dictation, in my presence
and hearing and under my personal direction
and superintendence and interpreted to the witness
in the presence of the accused and admitted to the
witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.43/2019**

அ.சா.5

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலமுருகன் | Caste: | |
| Father's Name: | மலையாளம் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.10.2024.

(1 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை .பி.என்.எஸ்.எஸ் பிரிவு 355–ன் கீழ் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் பார்த்திபனூர் தெற்குதெருவில் குடியிருக்கிறேன். நான் மேளம் வாசிக்கும் வேலை செய்துவருகிறேன். சாட்சிகள் மதுரை வீரன், முனியசாமி, சுகுணாபாரதி, சாவித்திரி, மாரிமுத்து, பாலமுருகன், செந்தூர்பாண்டி ஆகியோரை தெரியும். அவர்கள் என் ஊர்க்காரர்கள். இந்த வழக்கின் எதிரிகள் சரவணன், முத்துபாண்டி, வினோத்குமார், அஜித், பாலகிருஷ்ணன், லதா, மாரீஸ்வரி, ஆகியோரை தெரியும். நேரில் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். எதிரிகள் மறவர் மற்றும் அகமுடையார் வகுப்பை சேர்ந்தவர்கள். 2017 ம் ஆண்டு ஒருநாள் மாலை சுமார் 5 மணிக்கு நான் வேலைமுடித்துவிட்டு வீட்டிற்கு வந்து வீட்டிலிருந்தேன்.அப்போது புதுத்தெருவில் சத்தம் கேட்டு அங்கு போய் பார்த்தபொழுது நிறைய பேர் இருந்தார்கள். மதுரைவீரன், முனியசாமி, சுகுணாபாரதி ஆகியோர் அங்கு இருந்தார்கள். எதிரிகள் சரவணன்,

முத்துபாண்டி, வினோத், அஜித் ஆகியோரும் நிறைய பேரும் அங்கு இருந்தார்கள். மதுரை வீரனை பாலகிருஷ்ணன் கையால் அடித்தார். முனியசாமியை முள்ளு குச்சியால் எதிரி சரவணன் அடித்தார். வினோத்தும், அஜித்தும் மாறிமாறி மதுரைவீரனையும், முனியசாமியையும் முள்குச்சியால் அடித்தார்கள். முனியசாமியை பாலகிருஷ்ணன் தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஓட்டால் தோள்பட்டையில் அடித்தார். பற பயல்களா உங்களால என்ன செய்ய முடியும் என்று கொச்சை வார்த்தைகளால் திட்டி அடித்தார்கள். அங்கிருந்த 3 பெண்கள் விளக்குமாறால் மதுரைவீரனையும், முனியசாமியையும் அடித்தார்கள். செந்தூர்பாண்டி, மாரிமுத்து ஆகியோரும் நானும் சண்டையை விலக்கி விட்டோம். முனியசாமியை ஒரு ஆட்டோவில் ஏற்றி பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் இது சம்பந்தமாக DSP என்னை விசாரித்தார்.

**1 முதல் 4, 7,8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை

**5,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை

Taken down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted to the witness to be correct.

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)